முழுப் பதிப்புரிமையுடையது.

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## மட்டம் I பரீட்சை – 2024 யூலை

## (101) நிதிக் கணக்கீடு

(Financial Accounting)

2024-08-17
காலை
[9.00 – 12.00]

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):

(1) ***காலம் :*** *03 மணித்தியாலம்*

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

பக்கங்கள் : 10
வினாக்கள் : 06

(3) *உங்களுக்குத் தரப்பட்டுள்ள **விடைப்புத்தகத்தில்** நீங்கள் விண்ணப்பித்த அதே **ஒரு மொழியிலேயே விடையளித்தல்** வேண்டும்.*

(4) *சகல செய்முறைகளையும் கணிப்புகளையும் சமர்ப்பிக்கவும். நீங்கள் மேற்கொண்ட எடுகோள்கள் ஏதாவது இருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*

(5) *நிரற்படுத்தப்படாத கணிப்பான்களின் பாவனை **மாத்திரம்** அனுமதிக்கப்பட்டுள்ளது.*

(6) *வரைவிலக்கணங்களுடன்கூடிய **செயல் வினைச்சொல் செவ்வை நிரல்** இணைக்கப்பட்டுள்ளது. OTQs தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு **வினைச்சொல்லைக்** கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள் செயல் வினைச்சொல் செவ்வை நிரலில் தரப்பட்ட வினைச்சொல் **வரைவிலக்கணத்தின்** அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(7) *100 புள்ளிகள்.*

---

## <u>பகுதி A</u>

### நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

(மொத்தம் 40 புள்ளிகள்)

## வினா 01

*இல. **1.1** இலிருந்து **1.10** வரையிலான வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க. தெரிவு செய்த விடையின் இலக்கத்தை உமது விடைப்புத்தகத்தில் வினாவுக்குரிய இலக்கத்துடன் எழுதுக.*

**1.1** உரிமம் ஒன்றின் பொறுப்புக்கள் அனைத்தையும் கழித்த பின்னரான அதன் சொத்துக்களின் ஈற்று வட்டியானது (residual interest) எவ்வாறு அழைக்கப்படுகிறது?

(1) வருமானம். (2) உரிமையாண்மை. (3) செலவினம். (4) காசு.

**1.2** *“இலங்கை பாராளுமன்றம் 2024 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க நிகழ்நிலை காப்புச் சட்டத்தினை (online safety) அண்மையில் நிறைவேற்றியிருந்தது”.*

மேற்படி கூற்றினை கீழ்வரும் எந்த சூழற் காரணி பிரதிநிதித்துவப்படுத்துகிறது?

(1) பொருளாதாரச் சூழல். (2) சட்டச் சூழல்.

(3) தொழினுட்பச் சூழல். (4) சமூகச் சூழல்.

**1.3** பொருள்களைப் பெறும்போது அந்தப் பொருள்கள் பெற்றுக்கொள்ளப்பட்டது என்பதை உறுதிப்படுத்தி களஞ்சியக் காப்பாளரால் தயாரிக்கப்படும் சரியான மூல ஆவணத்தை கீழுள்ளவற்றிலிருந்து தெரிவு செய்க :

(1) கொள்வனவுக் கட்டளை (PO).
(2) பொருள் பெறுவனவுச் சீட்டு (GRN).
(3) பொருள் கோரிக்கைச் சீட்டு (MRN).
(4) வரவுக் குறிப்பு.

**1.4** ***ஸ்ரீ ரேடர்ஸ்*** என்ற தனியுடமை வியாபாரத்தின் 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் கணக்கேடுகளிலிருந்து கீழ்வரும் தகவல்கள் பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

| | ரூபா |
|---|---:|
| 2024 மார்ச் 31 இல் மொத்தச் சொத்துக்கள் | 4,800,000 |
| 2024 மார்ச் 31 இல் பரிப்புக்கள் | 750,000 |
| 2023 ஏப்ரல் 01 இல் மூலதனம் | 2,000,000 |
| ஆண்டின் காலப்பகுதியிலான எடுப்பனவுகள் | 400,000 |
| ஆண்டின் காலப்பகுதியில் உள்ளிடப்பட்ட மேலதிக மூலதனம் | 800,000 |

மேற்படி தகவல்களின் அடிப்படையில், 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபம் :

(1) ரூ. 1,650,000/-. (2) ரூ. 2,050,000/-. (3) ரூ. 2,450,000/- (4) ரூ. 1,800,000/-.

**1.5** கடன் அடிப்படையில் விற்பனை செய்யப்பட்ட பொருள்களின் திரும்பலைப் பதிவு செய்வதற்காக விற்பனையாளர் ஒருவரால் பயன்படுத்தப்படும் முதன்மைப் பதிவேடு :

(1) வெளிச்சென்ற திரும்பல்கள் நாளேடு.
(2) உள்வந்த திரும்பல்கள் நாளேடு.
(3) கொள்வனவு நாளேடு.
(4) விற்பனை நாளேடு.

**1.6** **ஷாம் டிரேடர்ஸ்** 2022 ஏப்ரல் 01 இல் ரூபா 4,000,000/- இற்கு மோட்டார் வாகனம் ஒன்றைக் கொள்வனவு செய்தது. வணிகத்தின் கொள்கையானது ஆண்டிற்கு 20% இல் குறைந்து செல்லும் மீதி முறையில் தேய்மானம் செய்வதாகும். 2024 மார்ச் 31 இல் மோட்டார் வாகனத்தின் முன்கொணரற் பெறுமதி (நிகர புத்தகப் பெறுமதி):

(1) ரூ. 2,400,000/-. (2) ரூ. 3,200,000/-. (3) ரூ. 2,560,000/-. (4) ரூ. 3,000,000/-.

**1.7** **குசல்** என்பவர் ரூபா 2,000,000/- பெறுமதியான ஒரு மோட்டார் வாகனத்தையும் ரூபா 500,000/- இனை காசாகவும் இட்டு, ஒரு தளபாட வணிகத்தை (தனியுடமை வியாபாரத்தை) ஆரம்பித்தார். இந்த ஊடுசெயலின் கணக்கீட்டுச் சமன்பாட்டிற்கான சரியான தாக்கத்தைக் கீழ்வருவனவற்றிலிருந்து தெரிவு செய்க :

| | சொத்துக்கள் (ரூபா) | = | மூலதனம் (உரிமையாண்மை)(ரூபா) | + பரிப்புக்கள் (ரூபா) |
|---|---:|---|---:|---:|
| (1) | + 2,500,000 | = | + 2,500,000 | - |
| (2) | + 500,000 | = | + 500,000 | - |
| (3) | + 2,500,000 | = | - | + 2,500,000 |
| (4) | + 2,500,000 | = | + 500,000 | + 2,000,000 |

**1.8** கடன்பட்டோரிடமிருந்தான ஐயக் கடன்களுக்காக ஒரு ஏற்பாடு செய்யப்பட வேண்டும். இது தொடர்பான கணக்கீட்டு எண்ணக்கரு :

(1) அலகுசார் (உரிம) எண்ணக்கரு. (2) பொருண்மைசார் எண்ணக்கரு.

(3) முன்னெச்சரிக்கை எண்ணக்கரு. (4) மாறாமை எண்ணக்கரு.

**1.9** கீழ்வரும் எந்த ஊடுசெயல் பொது நாட்குறிப்பேட்டில் பதிவு **செய்யப்படமாட்டாது**?

(1) காசு மூலம் அலுவலகப் பாவனைக்காக கணினி ஒன்றைக் கொள்வனவு செய்தல்.

(2) வணிகத்தில் பயன்படுத்தப்பட்ட மோட்டார் வாகனம் ஒன்றைக் கடனுக்கு விற்பனை செய்தல்.

(3) வழுக்களைத் திருத்துகின்ற ஒரு பதிவு.

(4) ஆரம்ப நாட்குறிப்பேட்டுப் பதிவுகள்.

**1.10** ***வரையறுக்கப்பட்ட ராணி கம்பனி*** அதன் தொழிற்சாலைக் கட்டடத்திற்காக நாட்காட்டி வருடம் 2024 இற்கு ரூபா 120,000/- இனை காப்புறுதித் தவணைப்பணமாகச் செலுத்தியுள்ளது. வணிகத்தின் கணக்காளர் ரூபா 30,000/- இனை காப்புறுதிச் செலவினமாகவும் மீதி ரூபா 90,000/- இனை 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த நிதியாண்டிற்காக முன்-செலுத்திய காப்புறுதிக் கட்டணமாகவும் பதிவு செய்திருந்தார்.

இந்தச் செய்கையுடன் தொடர்புடைய கணக்கீட்டு எண்ணக்கரு :

(1) அட்டுறு எண்ணக்கரு. (2) தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு.

(3) வருமான ஏற்பிசைவு எண்ணக்கரு. (4) பொருத்தப்பாட்டு எண்ணக்கரு.

*கீழே* **1.11** *தொடக்கம்* **1.15** *வரையில் தரப்பட்டுள்ள ஒவ்வொரு கூற்றும்* ***சரியானதா*** *அல்லது* ***தவறானதா*** *எனக் குறிப்பிடுக. உமது விடையை (சரியானது / தவறானது) உரிய வினா இலக்கத்துடன் விடைப்புத்தகத்தில் குறிப்பிடுக.*

**1.11** வருமானமும் செலவினங்களும் வருமானக் கூற்றின் மூலகங்கள் ஆகும்.

**1.12** 12 மாத காலப்பகுதியின் பின்னர் தீர்ப்பனவு செய்ய எதிர்பார்க்கப்படுகின்ற பரிப்புக்களை, நடைமுறைப் பரிப்புக்களின் கீழ் வகைப்படுத்தலாம்.

**1.13** நடைமுறை மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களாக உரிமமொன்றின் சொத்துக்களை வகைப்படுத்துவது, நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது மேற்கொள்ளப்படும் தொடர்ந்தியங்கும் என்ற எண்ணக்கருவின் ஒரு நடைமுறையாகும்.

**1.14** இரகசியத்தன்மை என்பது நிதித் தகவல்களின் ஒரு அடிப்படையான தரம்சார் பண்பாகும்.

**1.15** வணிகமொன்றில் மீள்விற்பனைக்காகக் கொள்வனவு செய்யப்படும் கணினிகள் ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் கீழ் பதிவு செய்யப்படுகின்றன.

**1.16** தொடக்கம் **1.20** *வரையுள்ள வினாக்களுக்கான விடைகளை உங்களது விடைப்புத்தகத்திலே உரிய வினா இலக்கத்திற்கு எதிரே எழுதுக.*

**1.16** கணக்கீட்டு வழுக்களுக்கான இரண்டு (02) காரணங்களைப் பட்டியலிடுக.

**1.17** “பொறுப்பு (Liability)” என்னும் பதத்தை பொருள் வரையறை செய்க.

**1.18** "விசேட கணக்கீட்டு மென்பொருள் (Specialized Accounting Software)" என்பதன் கருத்தைச் சுருக்கமாக விபரிக்குக.

**1.19** ஓர் உரிமம் வங்கி கணக்கிணக்கக் கூற்றை ஏன் தயாரிக்கிறது என்பதற்கான இரண்டு (02) காரணங்களைக் குறிப்பிடுக.

**1.20** "பண அளவீட்டு எண்ணக்கரு (Money Measurement Concept)" என்பதைச் சுருக்கமாக விபரிக்குக. (02 புள்ளிகள் வீதம், மொத்தம் 40 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

## பகுதி B

(மொத்தம் 40 புள்ளிகள்)

## வினா 02

**ரோஹித் ஹாட்வெயார்** என்பது ரூபா 2,250,000/- இனைக் காசாக முதலீடு செய்து, 2023 ஏப்ரல் 01 இல் **ரோஹித்** என்பவரால் ஆரம்பிக்கப்பட்ட ஒரு தனியுடமை வியாபாரமாகும்.

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கின் (காசேட்டின்) பொழிப்பு கீழே தரப்பட்டுள்ளது :

**காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு (காசேடு)**

| பெறுவனவுகள் | வரவு (ரூபா) | கொடுப்பனவுகள் | செலவு (ரூபா) |
|---|---|---|---|
| ஆரம்ப மூலதன முதலீடு | 2,250,000 | காசு கொள்வனவுகள் | 850,000 |
| காசு விற்பனை | 5,200,000 | வியாபாரக் கடன்கொடுத்தோருக்கான கொடுப்பனவுகள் | 3,750,000 |
| வியாபாரக் கடன்பட்டோரிடமிருந்தான பெறுவனவுகள் | 1,250,000 | சம்பளங்களும் கூலிகளும் | 950,000 |
| | | எடுப்பனவுகள் | 100,000 |
| | | சில்லறைக் காசுக்கு மாற்றப்பட்ட தொகை | 60,000 |
| | | இயந்திரம் (2024 சனவரி 01 இல் கொள்வனவு செய்யப்பட்டது.) | 1,000,000 |
| | | அலுவலக வாடகை | 900,000 |
| | | மின்சாரம் | 150,000 |
| | | மீதி மு.கொ.செ. | 940,000 |
| | **8,700,000** | | **8,700,000** |

(2) 2024 மார்ச் 31 இல் வருமதி மற்றும் சென்மதி மீதிகள் கீழ்வருமாறு :

| | ரூபா |
|---|---|
| வியாபாரக் கடன்பட்டோர் | 1,600,000 |
| வியாபாரக் கடன்கொடுத்தோர் | 1,100,000 |
| செலுத்த வேண்டிய சம்பளம் | 80,000 |

(3) இயந்திரமானது நேர்கோட்டு அடிப்படையில், கிரயத்தில், ஆண்டிற்கு 20% இல் தேய்மானம் செய்யப்பட வேண்டும்.

(4) கீழ்வரும் செலவினங்கள் சில்லறைக் காசிலிருந்து செலுத்தப்பட்டுள்ளன :

- (i) நீர்க் கட்டணம் : ரூபா 12,000/-.
- (ii) காகிதாதிகள் : ரூபா 8,000/-.
- (iii) பயணமும் போக்குவரத்தும் : ரூபா 25,000/-.

(5) அலுவலக வாடகைக் கொடுப்பனவில், 2024 ஏப்ரல் தொடக்கம் 2024 யூன் வரையான காலப்பகுதிக்காகச் செலுத்திய வாடகை முற்பணம் ரூபா 180,000/- உள்ளடங்குகிறது.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

2024 மார்ச் 31 இல் **ரோஹித் ஹாட்வெயாரின்** பரீட்சை மீதியைத் **தயாரிக்குக**. (10 புள்ளிகள்)

## வினா 03

**றிஷாட் அலுமினியம்** என்பது அலுமினியப் பொருள்களைத் தயாரிக்கின்ற ஒரு கம்பனியாகும். 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **றிஷாட் அலுமினியத்தின்** கணக்கேடுகளிலிருந்து கீழ்வரும் தகவல்கள் பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

| விபரம் | ரூபா |
|---|---|
| 2023 ஏப்ரல் 01 இல் மூலப்பொருள் இருப்பு | 380,000 |
| ஆண்டின்போது கொள்வனவு செய்யப்பட்ட மூலப்பொருள்கள் | 3,600,000 |
| 2023 ஏப்ரல் 01 இல் புத்துருவாகும் வேலைகள் | Nil |
| மூலப்பொருளின் உள்வந்த வண்டிக்கூலி | 55,000 |
| உற்பத்திப் பணியாளர்களுக்கான நேர் கூலிகள் | 1,800,000 |
| இயந்திரத்தின் பராமரிப்பு | 120,000 |
| பாதுகாப்புக் கட்டணங்கள் | 450,000 |
| மின்சாரம் | 800,000 |
| வாடகை | 570,000 |
| தேய்மானம் - பொறி மற்றும் இயந்திரம் | 120,000 |
| தேய்மானம் - மோட்டார் லொறி | 360,000 |

கீழ்வரும் மேலதிக தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) 2024 மார்ச் 31 இல் இறுதித் தொக்கு மீதிகள் கீழ்வருமாறு மதிப்பிடப்பட்டுள்ளன :

| விபரம் | ரூபா |
|---|---|
| மூலப்பொருள் இருப்பு (கிரயத்தில்) | 150,000 |
| புத்துருவாகும் வேலைகள் (முதன்மைக் கிரயத்தில் மதிப்பிடப்பட்டது) | 180,000 |

(2) கீழ்வரும் செலவினங்கள் பின்வருமாறு ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் :

| செலவினம் | தொழிற்சாலை | அலுவலகம் |
|---|---|---|
| மின்சாரம் | 75% | 25% |
| வாடகை | 70% | 30% |
| பாதுகாப்புக் கட்டணங்கள் | 80% | 20% |

(3) பொறியும் இயந்திரமும் அலுமினியப் பொருள்களின் உற்பத்திக்குப் பயன்படுத்தப்படுவதுடன் மோட்டார் லொறியானது வாடிக்கையாளர்களுக்கு உற்பத்திப் பொருள்களை விநியோகிப்பதற்காக வணிகத்தினால் பயன்படுத்தப்படுகிறது.

(4) உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள், உற்பத்திக் கிரயத்தில் 15% இலாப எல்லை வைத்து, வியாபாரப் பிரிவுக்கு மாற்றப்படுகின்றன.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **றிஷாட் அலுமினியத்தின்** உற்பத்திக் கிரயக் கூற்றைத் (உற்பத்திக் கணக்கைத்) **தயாரிக்குக.** (10 புள்ளிகள்)

## வினா 04

கணக்குகள் நிறைவேற்றுநரால் தயாரிக்கப்பட்ட 2024 மார்ச் 31 இலான **புபுது டிரேடர்ஸ்** இன் பரீட்சை மீதி இணங்கவில்லை என்பதுடன் வித்தியாசம் ரூபா 27,000/- ஆனது தொங்கற் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டது.

வித்தியாசத்திற்கான கீழ்வரும் காரணங்கள் பின்னர் அடையாளங் காணப்பட்டன :

(1) 2024 மார்ச் மாதத்திற்கான அமய சம்பளக் கொடுப்பனவு (casual salary payment) ரூபா 8,000/- ஆனது காசேட்டில் மாத்திரமே பதியப்பட்டிருந்தது.

(2) வங்கிக் கடன் மீதான வட்டி ரூபா 6,000/- காசேட்டில் சரியாகப் பதிவு செய்யப்பட்டிருந்தது எனினும், அது தவறாக வட்டி வருமானக் கணக்கிற்கு செலவுப்பதிவு செய்யப்பட்டது.

(3) 2023 அக்டோபர் 01 இல் ரூபா 80,000/- பெறுமதியான அச்சுப்பொறி ஒன்றின் கொள்வனவானது கணினிப் பழுதுபார்ப்புக் கணக்கிற்கு வரவுப்பதிவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இது காசேட்டில் சரியாகப் பதியப்பட்டிருந்தது. நேர்கோட்டு அடிப்படையில், கிரயத்தில் ஆண்டிற்கு 10% என்ற அச்சுப்பொறி மீதான பொருத்தமான தேய்மானமானமும் கணக்கேடுகளில் பதியப்படவில்லை.

(4) 2024 மார்ச் மாதத்திற்கான அட்டுறு மின்சாரக் கட்டணம் ரூபா 5,000/- ஆனது சம்பந்தப்பட்ட கணக்கேடுகளில் இருமுறை பதிவு செய்யப்பட்டிருந்தது.

(5) கடன்பட்டோருக்கு வழங்கப்பட்ட ரூபா 12,500/- பெறுமதியான கழிவுகள் (தள்ளுபடிகள்), பெற்ற கழிவுகள் கணக்கிற்கு செலவுப்பதிவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இது கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் சரியாகப் பதிவு செய்யப்பட்டிருந்தது.

(6) 2024 சனவரி மாதத்திற்காகச் செலுத்தப்பட்ட வாடகைச் செலவினம் ரூபா 24,000/- ஆனது வாடகை செலவினக் கணக்கில் ரூபா 42,000/- ஆகப் பதிவு செய்யப்பட்டிருந்தது. இருப்பினும், அதற்கான செலவுப் பதிவு சரியாக மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக** :

(a) மேற்படி வழுக்களைத் திருத்துவதற்கான நாட்குறிப்பேட்டுப் பதிவுகள். (07 புள்ளிகள்)

(b) தொங்கற் கணக்கு.. (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 05

(A) **வருணி** என்பவர் சில்லறை வணிகம் ஒன்றை நடத்திச்செல்கிறார். கீழ்வரும் கொடுக்கல் வாங்கல்கள் 2024 சனவரி மாதத்தில் இடம்பெற்றவையாகும் :

(1) ரூபா 250,000/- பெறுமதியான பொருள்கள் மீள்விற்பனைக்காக கடன் காலத்துடன் கொள்வனவு செய்யப்பட்டன.

(2) ரூபா 150,000/- கிரயமான பொருள்கள் காசு அடிப்படையில் ரூபா 200,000/- இற்கு விற்பனை செய்யப்பட்டன.

(3) சேமிப்புக் கணக்கிற்குக் கிடைக்கப்பெற்ற வட்டி வருமானம் ரூபா 2,000/- ஆகும்.

(4) செலுத்திய மாதாந்த மின்சாரக் கட்டணம் ரூபா 6,000/-.

(5) கடன் தவணைக் கட்டணம் ரூபா 15,000/- செலுத்தப்பட்டது. இதில் ரூபா 5,000/- ஆனது வட்டிக்குரிய பகுதியாகும்.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

கீழ்வரும் கணக்கீட்டுச் சமன்பாட்டிற்கான மேற்படி ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்களினதும் தாக்கத்தைக் **குறிப்பிடுக.**

*[தொக்கு + காசு = உரிமையாண்மை (மூலதனம்) + பரிப்புக்கள்]* (05 புள்ளிகள்)

(B) 2024 சனவரி 31 இல், **அனுஷ்கா பியூட்டி சலூன்** இன் வங்கிக் கூற்றானது சாதகமான மீதி ரூபா 27,000/- இனைக் காட்டுகின்ற அதே வேளை காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கானது ஒரு வரவு (சாதகமான) மீதி ரூபா 25,000/- இனைக் காட்டியது.

அதன் பின்னர், வணிகத்தின் கணக்குகள் நிறைவேற்றுநர், வங்கிக் கூற்றின் மீதிக்கும் காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதிக்குமிடையேயான வித்தியாசத்திற்கான காரணங்களாக கீழ்வருவன வற்றை அவதானித்தார் :

(1) வழங்கப்பட்ட நிலையியற் கட்டளை அறிவுறுத்தல்களின்படி, கடன் தவணைக் கட்டணம் ரூபா 15,000/- இனை வங்கி வரவு வைத்திருந்தது. எனினும், இது காசேட்டில் பதியப்படவில்லை.

(2) 2024 சனவரி 10 இல், வங்கியானது வங்கிக் கட்டணங்களாக ரூபா 500/- இனை வரவுப்பதிவு செய்திருந்தது. ஆனால் இது காசேட்டில் பதிவு செய்யப்படவில்லை.

(3) நிலையான வைப்பு மீதான வட்டி வருமானம் ரூபா 8,000/- ஆனது வங்கியால் வங்கிக் கணக்கிற்கு செலவுப்பதிவு செய்யப்பட்டிருந்தது. எனினும் அது காசேட்டில் கருத்திற் கொள்ளப்படவில்லை.

(4) ரூபா 18,500/- பெறுமதியான ஒரு காசோலை 2024 சனவரி 30 இல் வழங்கப்பட்டிருந்தது. எனினும் 2024 சனவரி 31 வரை அக்காசோலை கொடுப்பனவுக்காக வங்கியில் சமர்ப்பிக்கப்பட வில்லை.

(5) ரூபா 9,000/- பெறுமதியான ஒரு காசோலை 2024 சனவரி 29 இல் வங்கியில் வைப்புச் செய்யப்பட்டது. ஆனாலும், 2024 சனவரி 31 வரை அது தேறியிருக்கவில்லை.

**நீங்கள் செய்ய வேண்டியவை:**

கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக**:

(a) சீராக்கப்பட்ட காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு (காசேடு). (03 புள்ளிகள்)

(b) 2024 சனவரி 31 இல் வங்கி கணக்கிணக்கக் கூற்று. (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

## பகுதி C

(மொத்தம் 20 புள்ளிகள்)

## வினா 06

**நிம்சரா தளபாடங்கள்** என்பது **நிம்சரா** என்பவருக்குச் சொந்தமான ஒரு தனியுடமை வியாபாரமாகும். 2024 மார்ச் 31 இலான **நிம்சரா தளபாடங்களின்** பரீட்சை மீதி கீழ்வருமாறு :

**நிம்சரா தளபாடங்கள்**

**2024 மார்ச் 31 இலான பரீட்சை மீதி** *(ரூபா '000)*

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| பொறி மற்றும் உபகரணம் - கிரயத்தில் : | | |
| அலுவலக உபகரணம் | 8,000 | |
| தளபாடமும் பொருத்துக்களும் | 2,500 | |
| மோட்டார் வாகனம் | 2,000 | |
| 2023 ஏப்ரல் 01 இல் திரண்ட தேய்மானம் : | | |
| அலுவலக உபகரணம் | | 2,000 |
| தளபாடமும் பொருத்துக்களும் | | 1,250 |
| மோட்டார் வாகனம் | | 500 |
| விற்பனைகள் | | 77,500 |
| கொள்வனவுகள் | 46,300 | |
| 2023 ஏப்ரல் 01 இல் தொக்கு | 7,900 | |
| வியாபார வருமதிகள் | 2,250 | |
| வியாபார சென்மதிகள் | | 3,250 |
| வங்கியிலுள்ள காசு | 1,000 | |
| கையிலுள்ள காசு | 70 | |
| வங்கிக் கடன் | | 500 |
| சம்பளங்களும் கூலிகளும் | 12,800 | |
| காப்புறுதி | 240 | |
| பாதுகாப்புக் கட்டணங்கள் | 800 | |
| மின்சாரம் | 2,250 | |
| விற்பனைத் தரகு (பணிசை) | 900 | |
| செலுத்திய அலுவலக வாடகை | 2,600 | |
| 2023 ஏப்ரல் 01 இல் மூலதனக் கணக்கு | | 4,610 |
| **மொத்தம்** | **89,610** | **89,610** |

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) 2024 மார்ச் 31 இல் கிரயத்தில் மதிப்பிடப்பட்ட இறுதித் தொக்கு ரூபா 5,200,000/- ஆகும்.

(2) 2024 மார்ச் மாதத்திற்கான மின்சாரக் கட்டணம் ரூபா 32,000/- ஆனது 2024 மார்ச் 31 வரை செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(3) வணிகத்தை விரிவுபடுத்துவதற்காக 2024 சனவரி 01 இல், **ABC வங்கியிடமிருந்து** ரூபா 500,000/- வங்கிக் கடனொன்று பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் இதற்காக மாதாந்தம் ரூபா 15,000/- வட்டி செலுத்தவும் 12 மாதங்களுக்குள் கடனை முழுமையாகத் தீர்ப்பனவு செய்யவும் இணங்கிக் கொள்ளப்பட்டது. 2024 சனவரி முதல் 2024 மார்ச் மாதம் வரையான காலப்பகுதிக்கு **நிம்சரா** இணங்கிக்கொண்டவாறு வட்டியையோ (interest) அல்லது முதலையோ (capital) செலுத்தியிருக்க வில்லை.

(4) வணிகத்தின் கொள்கையானது கீழ்வருமாறு கிரயத்தில், நேர்கோட்டு அடிப்படையில் தேய்மானம் செய்வதாகும் :

| | | |
|---|---|---|
| அலுவலக உபகரணம் | : | ஆண்டிற்கு 20 %. |
| தளபாடமும் பொருத்துக்களும் | : | ஆண்டிற்கு 20 %. |
| மோட்டார் வாகனம் | : | ஆண்டிற்கு 25 %. |

(5) அலுவலகத்தின் வாடகை உடன்படிக்கையானது, உடன்படிக்கைக் காலப்பகுதியின் முடிவில் (அதாவது, 2 ஆண்டுகளின் பின்னர்) மீளளிக்கப்படுகின்ற பொறுப்புறுதிப் பணமாக (key money) 6 மாத வாடகையைச் செலுத்தியதன் மூலம் 2023 செப்ரெம்பர் 01 இல் செய்துகொள்ளப்பட்டது. மாதாந்த அலுவலக வாடகை ரூபா 200,000/- ஆகும்.

(6) நீண்டகால கடன்பட்டோர் மீதி ரூபா 50,000/- இனை அறவிடமுடியாக் கடனாகப் பதிவழிப்புச் செய்வதற்கு **நிம்சரா** தீர்மானித்ததுடன், 2024 மார்ச் 31 இலுள்ள எஞ்சிய வியாபார வருமதிகள் மீதியில் 5% ஐயக்கடன் ஏற்பாட்டைச் செய்வதற்கும் தீர்மானித்திருந்தார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை:**

கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக**:

(a) 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முற்றடக்க வருமானக் கூற்று. (12 புள்ளிகள்)

(b) 2024 மார்ச் 31 இலான நிதி நிலைக் கூற்று. (08 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **அறிவு (1)** | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | **வரைக (Draw)** | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | **கூறுக/ குறிப்பிடுக(State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | **அடையாளங்காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **முற்றடக்கம் (2)** | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | **ஏற்பிசைவு செய்க (Recognize)** | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | **பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret)** | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | **விளக்குக (Describe)** | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | **விபரிக்குக (Explain)** | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | **பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define)** | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பிரயோகம் (3)** | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile)** | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | **வரைக (Graph)** | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | **தயாரிக்குக (Prepare)** | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | **எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate)** | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate)** | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பகுப்பாய்வு (4)** | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | **தொடர்பாடுக(Communicate)** | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | **சுருக்கமாகக குறிப்பிடுக(Outline)** | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | **வேறுபடுத்துக (Contrast)** | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss)** | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | **வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |